

மதுரை கிழக்கு தொகுதி கழக வேட்பாளர் வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தனது இறுதி கட்ட பிரச்சாரத்தின் போது தொகுதிக்குட்பட்ட ஒத்தக்கடை பகுதிகளில் வீதி வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் கழக நிர்வாகிகள் அ.பா.ரகுபதி, மதிவாணன், ஹக்கீம், சிறைச்செல்வன், வழக்கறிஞர் கலாநிதி, நேரு பாண்டியன், சோமசுந்தர பாண்டியன், அழகுபாண்டி, வடிவேல் முருகன், பெ.சசிகுமார், மருதுபாண்டியன், கௌரிசங்கர், பாண்டியராஜா, பா.வீரராகவன், ஒத்தக்கடை சரவணன், அண்ணாமலை, எம்.இளங்கோ, ஆதிசங்கர், பாலாண்டி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



மதுரை மாவட்டம் திருமங்கலம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் திருமங்கலம் நகர் பகுதியில் வீதி வீதியாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்து தனது இறுதி கட்ட பிரச்சாரத்தை நிறைவு செய்தார், உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.



மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் தொகுதி கழக வேட்பாளர் தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கிருத்திகா தங்க பாண்டியன் திருப்பரங்குன்றம் பகுதியில் வீதி வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்து தனது இறுதி கட்ட பிரச்சாரத்தை நிறைவு செய்தார். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.




மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதி கழக வேட்பாளர் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., வாடிப்பட்டி பேரூர் பகுதியில் வீதிவீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்து தனது இறுதி கட்ட பிரச்சாரத்தை நிறைவு செய்தார். உடன் பேரூர்ச் செயலாளர் மு.பால்பாண்டியன், வடக்கு ஒன்றிய செயலாளர் பாலராஜேந்திரன் உள்ளிட்ட திரளான தி.மு.க. நிர்வாகிகள், தி.மு.க.வினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.



மதுரை வடக்கு தொகுதி கழக வேட்பாளர் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தொகுதி முழுவதும் வீதி வீதியாகச் சென்று உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்து தனது இறுதி கட்ட பிரச்சாரத்தை நிறைவு செய்தார். உடன் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, மாநில தீர்மானக் குழு செயலாளர் அக்ரி கணேசன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.



மதுரை மாவட்டம் ஆலாத்தூரில் நடைபெற்ற மதுரை கிழக்கு மற்றும் மேற்கு தொகுதிக்கு உட்பட்ட யாதவர் சமுதாய சங்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கிழக்கு தொகுதி கழக வேட்பாளர், மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.கோபாலகிருஷ்ணன், பகுதி செயலாளர் பெ. சசிகுமார், பொதுக்குழு உறுப்பினர் பூமிநாதன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வீரராகவன், மாவட்டத் துணைச் செயலாளர் ஆசை கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் புதூர் சேகர், யாதவா மகளிர் கல்லூரி நிர்வாகி போத்தி, இந்திய தேசிய காங்கிரஸ் மாவட்ட தலைவர் நல்லமணி உள்ளிட்ட யாதவ சங்க நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர்.

# திருவாரூர் தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியே வெல்லும்!

## கருத்துக்கணிப்பிலும் மக்கள் கணிப்பிலும் கழக ஆட்சிக்கு பெருகும் ஆதரவு!

திருவாரூர்,ஏப்.23.

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள திருவாரூர், மன்னார்குடி, நன்னிலம், திருத்துறைப்பூண்டி உள்ளிட்ட நான்கு தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் திராவிட நாயகர் தளபதி அவர்களின் நல்வாழ்த்துக்களோடு, மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களி தந்த திருவாரூரில் தி.மு.க. சார்பில் பூண்டி.கே.கலைவாணன் அவர்களும் , மன்னார்குடியில் தி.மு.க. சார்பில் டி.ஆர்.பி.ராஜா அவர்களும் நன்னிலம் தொகுதியில் எஸ்டிபிஐ சார்பில் முகமது முபாரக் அவர்களும் , திருத்துறைப்பூண்டியில் சிபிஐ சார்பில் கே. மாரிமுத்து அவர்களும் மக்களின் ஏகோபித்த ஆதரவோடு போட்டியிடுகின்றனர்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து திராவிட நாயகர் கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் திருவாரூரில் பிரச்சாரத்தை துவக்கி வைத்த நிலையில் , திராவிடர் கழக தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்களும், கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர்களின் நம்பிக்கை உதயநிதி ஸ்டாலின் அவர்களும் , நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி அவர்களும் தொடர்ந்து பிரச்சாரம் செய்தனர்.

மேலும் சி.பி.ஐ. தேசிய கட்டுப்பாட்டுக்குழு தலைவர் இரா.முத்தரசன், சி.பி.எம். கட்டுப்பட்டுக்குழு தலைவர் ராமகிருஷ்ணன் உள்ளிட்ட தேசிய தலைவர்களும் திருவாரூரில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர்களுக்கு ஆதரவு பிரச்சாரம் மேற்கொண்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஐந்தாண்டுகால பொற்கால ஆட்சி, மக்களுக்கு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சி தந்திருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், புதுமைப்பெண் ,தமிழ்புதல்வன் , நான் முதல்வன் உள்ளிட்ட உலகம் போற்றும் அற்புத திட்டங்கள் , ஒன்றிய அரசின் இந்தி திணிப்பு, புதிய கல்விக்கொள்கை , சனாதன திணிப்பு, சி.ஏ.ஏ., புதிய வேளாண் சட்டம், நாடாளுமன்ற தொகுதிகள் சீரமைப்பு உள்ளிட்ட எண்ணற்ற நெருக்கடிக்களில் அதனை தனது ராஜதந்திரங்களால் வென்றடுத்த முதலமைச்சரின் வெற்றியால் ஈர்க்கப்பட்ட பொது மக்கள் , இப்படி ஒரு முதல்வரை பெற்றமைக்கு பெருமைப்படுவதோடு , மக்கள் இடத்தில் இருந்து சிந்திக்கும் ஒரு முதல்வரை 2026ல் மீண்டும் முதல்வராக தெரிவுசெய்ய முடிவெடுத்திருக்கிறார்கள்.

இதனையே அனைத்து பத்திரிகை மற்றும் ஊடகங்கள், சமூக வளைதளங்களில் என அனைத்திலும் ஒத்த குரலாக பிரதிபலிக்கிறது. திருவாரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியே வெல்லும் என்பதும் தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான ஆட்சியே தொடரும் என்பதும் கருத்துக்கணிப்புக்களாலும் மக்கள் கணிப்புக்களாலும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கா.மு. கதிரவன்

ஏப்ரல் 23 (1995)



இளமைக்காலம் முதல் திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு நெல்லை மாவட்டத்தில் இயக்கம் வளர்த்தவர்.

நெல்லை மாவட்டக் கழகச் செயலாளராகவும், தமிழக அரசு கொறடாவாகவும் பணியாற்றியவர்.

“இஸ்லாமிய சமுதாயத்து இளைஞர் சம்சுதீன்; இந்த இயக்கத்திற்குத் தன்னைக் கதிரவன் என்று அடையாளம் காட்டிக் கொண்டவர். ஒரு முப்பதாண்டு காலத்திற்கு மேலாகத் திராவிட இயக்கத்தின் நன்முத்தாக ஒளிவிட்டு; தமிழக முழுதுமுள்ள கழக உடன்பிறப்புக்களின் இதயங்களில் எல்லாம் இடம்பெற்று; அமைதி நிறைந்த தோற்றத்தினால் – ஆர்ப்பாட்டமற்ற பேச்சினால் – ஆடம்பரமற்ற நடவடிக்கைகளினால் – பழகுவதற்கு இனிய பண்பாளர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.